சுதர்சனம் அவர்களும், பா.ம.க. சார்பிலே தம்பி வேல்முருகன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே செல்வி பாலபாரதி அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நண்பர் சிவபுண்ணியம் அவர்களும், என்னுடைய அன்புக்கும் நேசத்துக்கும் உரிய நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும், பேரவைத் தலைவராகிய தாங்களும் வழங்கிய வாழ்த்துகளுக்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்

(அ) தேனி மாவட்டம், உத்தமபாளையம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தேனி மாவட்டம், உத்தமபாளையத்தில், முல்லை பெரியாற்றிலிருந்து குடிநீர் பெறுகின்ற உத்தமபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், உத்தமபாளையம் மற்றும் சின்னமனூர், அதைச் சுற்றி இருக்கின்ற நூற்றுக்கணக்கான கிராமங்களில் குடிநீர் பருகிய நூற்றுக்கணக்கான பொது மக்கள் வாந்தி, வயிற்றுப் போக்கு, மயக்கம் முதலியவை ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பவித்ரா என்ற 10 வயது பெண் குழந்தை இறந்து போயிருக்கிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் பெறுகின்ற உத்தமபாளையம் மற்றும் அதைச் சுற்றி இருக்கின்ற கிராமங்களில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வந்ததால் இந்த பெரும் பாதிப்பு அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது என்று மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதை, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தப் பகுதிகளில் என்ன காரணத்தினால் இம்மாதிரியான நிர்வாகக் குறைபாடு ஏற்பட்டது என்பதை அரசு அறிந்திருக்கிறதா அல்லது அரசுக்கு செய்தி வந்திருக்கிறதா? அதற்கு பின்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

2010 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைக் காலையிலே என்னிடம் சொல்லியிருந்தால் அமைச்சரிடம் நான் தகவல் சொல்லி, அவர் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) எங்கே கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) எனக்கு வரவில்லை. காலையில் வந்து நீங்கள் சொல்லி இருக்கலாமே? இனியாவது அது மாதிரி செய்யுங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கு ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல இந்தத் தகவல் முறையாக எனக்கு வரவில்லை என்று சொன்னாலும், அவர் சொன்ன அந்த உணர்வோடு நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்து, அது மாண்புமிகு உறுப்பினருக்கு பிறகு விளக்கமாக அறிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

(ஆ) பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைக் குறைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

முற்பகல் 10–10

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகவே சொல்கிறேன். இன்றையதினம் தமிழகத்திலே +2 மாணவர்களுக்கானத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கின்றன. நேற்று முன்தினம் நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பொறியியல் கல்லூரிகளுடைய முதல்வர்கள் மற்றும் தாளாளர்களுடைய கூட்டத்தில் பேசுகின்றபோது, பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான மதிப்பெண்களைக் குறைப்பதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்கிற தகவலை